3. கவன ஈர்ப்பு.

(1) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் நகராட்சியில் பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்காமை.

4.30 பி.ப. திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் நகராட்சியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு, 1973-ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் வழங்கப்பட வேண்டிய, 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்கான சம்பளம் வழங்கப்படாதது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சிங்காநல்லூர் நகராட்சியின் ஆரம்ப கல்வி நிதி நிலைமையை சரிக்கட்ட கீழ்க்கண்ட தொகை 1973-ஆம் ஆண்டில் நகராட்சிக்கு வழங்கப்பட்டது. 31—3—1972-வரை உள்ள மொத்தப் பற்றுக் குறையினை நீக்குவதற்காக, மானியமாக ரூபாய் 2,19,000, அரசு நிலை ஆணை எண். 1254, கல்வி, நாள் 10—7—1973-ல் வழங்கப்பட்டது. 31—3—1972-வரை உள்ள மொத்தப் பற்றுக்குறையினை நீக்குவதற்கான கடனாக ரூபாய் 1 லட்சம் அரசு நிலை ஆணை எண். 2265, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, நாள் 17—10—1973-ல் வழங்கப்பட்டது.

அரசு நிலை ஆணை எண். 650, ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, நாள் 31—3—1973-ல் நகராட்சிகள், தங்களுக்குச் சேர வேண்டிய 1972–73ஆம் ஆண்டுக்கான 1920-ஆம் ஆண்டின் ஆரம்பக் கல்விச் சட்டம், பிரிவு 37-ன் கீழான முன் மானியத்திற்கும், மற்றும் பற்றுக்குறை மானியத் திற்குமான விண்ணப்பங்களை 20—4—1973-க்குள் அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. சிங்காநல்லூர் நகராட்சியின் 1920-ஆம் ஆண்டின் ஆரம்பக் கல்விச் சட்டம், பிரிவு 37-ன் கீழான முன்மானியத் துக்கான விண்ணப்பம் அரசால் பெறப்பட்டு அரசு நிலை ஆணை எண். 1096 கல்வி, நாள் 18—6—1973-ல் இந்நகராட்சிக்கு ரூபாய் 1,55,091 மானியமாக வழங்கப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டுக்கான பற்றுக்குறை மானியத்துக்கான விண்ணப்பத்தை இந் நகராட்சி முன்பே அனுப்பி அரசின் ஆணையினை பெறத் தவறிவிட்டது. நகராட்சி ஆணையரின் விண் ணப்பம் 24—11—1973 அன்றுதான் அரசுக்கு வந்து சேர்ந்துள்ளது. இது குறித்த ஆணைகள் விரைவில் வழங்கப்படும். பற்றுக்குறை மானிய மாக ரூபாய் 2,15,909 வழங்கிய பின், சிங்காநல்லூர் நகராட்சி ஆசிரியர் களுக்கு அக்டோபர் மாதச் சம்பளம் அளிப்பதற்கு ஏதுவாகும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நக ராட்சியின் ஆணையாளர் அவர்கள், உரிய தேதியில் அரசுக்கு விண்ணப் பத்தை அனுப்பாத காரணத்தால், ஆசிரியப் பெரு மக்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் நின்றிருக்கிறதென்பதை அமைச்சரவர்கள் தெரிவித் தார்கள். அது மட்டுமல்லாமல், இன்னும் சில நகராட்சிகளில் நிரந்தர மாக 1-ஆம் தேதி சம்பளம் கொடுக்காத வழி முறை இருந்து வருகிறது. 22—5—1972-ஆம் நாளிலே அமைச்சரவர்களிடத்திலே உட்கார்ந்து ஆசிரி யர் கூட்டணி பேசிய நேரத்திலே, பஞ்சாயத்து யூனியன்களிலே பணி

புரிகின்ற ஆசிரியர்களுக்கு 1-ம் தேதி சம்பளம் அளிப்பதற்காக நிரந்தர மான சட்டம் இயற்றப்பட்டதுபோல, நகராட்சிகளுக்கும் செய்யப்படுமென்று கூறினார்கள். அந்த அடிப்படையில் விதி முறைகளைத் திருத்துவது எந்த நிலையில் உள்ளதென்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது சட்ட ரீதியாக மாற்றியமைக்கப்பட்டு, எல்லா நகரசபைகளிலும் 1-ஆம் தேதி சம்பளம் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1-ஆம் தேதி சம்பளத்தை வழங்குவதற்கான முயற்சிகளைப் பற்றி ஆராயும்படியாக அந்தத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அது பற்றி உள்ளாட்சித் துறை முடிவு எடுக்க வேண்டும். அதனுடைய நிலைமை களை ஆராய்ந்துதான் சொல்ல முடியும். எனவே தனிக் கேள்வி போட் டால், நிலைமைகளை ஆராய்ந்து சொல்லப்படும். மேலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

(2) நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந்துள்ள தொழில் தகராறு காரணமாக தொழிலாளிகள் பாதிப்பும், பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ்நிலைகள் உருவாகி வருவதும்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந் துள்ள தொழில் தகராறு காரணமாக பல நூற்றுக்கணக்கான தொழிலா ளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதும், தற்போது நிலவி வருகிற பதட்டமான நிலைமையும், அதனையொட்டி பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ் நிலைகள் உருவாகி வருவதும் குறித்து."

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நாகப்பட்டினத்தி லுள்ள இந்திய ஸ்டீல் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 600. மேற்படி தொழிலாளர்கள் நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம் மூலமாக, கடந்த ஆண்டுக்குக் கொடுத்த தொகைக்குக் குறையாமல் 1972–73 ஆண்டுக்கு மிகை ஊதியம் (போனஸ்) கொடுக்கவும், தற்போது அகவிலைப்படி கணக்கிடும்முறையை மாற்றி அமைக்கக்கூடாது என்றும் ஒரு தொழில் தாவா எழுப்பி யுள்ளனர். மேற்படி தொழிலாளர்கள் தாமதமாக வேலை செய்வதாகக் குற்றம் சாட்டி, நிர்வாகம் 4—11—73 முதல் கதவடைப்பு செய்துள்ளது. சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து 7—11—73 & 8—11—73 தேதிகளில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறவில்லை.

எல்லைமீறி தொழிற்சாலைக்குள் சென்றதற்காக 16—11—73-ம் தேதி 18 நபர்கள் கைது செய்யப்பட்டனர். நாகப்பட்டினம் கோட்டாட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன் மறியல் செய்ததற்காக (17—11—73 முதல் 24—11—73 முடிய 18—11—73 நீங்கலாக) நாளொன்றுக்கு